**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

ந.க.எண்: 1077/A11/பமேகு/ஒபக/2025, நாள்.19/08/2025

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – அனைத்து வகை அரசுப் பள்ளிகளில் ஆகஸ்ட்-2025 மாதத்திய பள்ளி மேலாண்மை குழு கூட்டம் – **29.08.2025, வெள்ளிக் கிழமை** நடத்துதல் - கூட்டப் பொருள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** (1) அரசாணை (நிலை) எண்.144, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள். 28.06.2024

(2) பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணை செயல்முறைகள் ந.க.எண். 9111 / கே2 / 2025, நாள்: 03.07.2025

(3) பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 012381 / ஜெ2 / 2025, நாள்: 11.07.2025

4) பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 025232 / எம்1இ1 / 2025, நாள்: 08.08.2025

**********

பார்வை-1-இன்படி அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பானது 2024 ஆகஸ்ட் மாதத்தில் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு செயல்பட்டு வருகிறது.

பார்வை-2 மற்றும் 3-இல் காண் செயல்முறைகளின்படி பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் முன்னேற்றத்தில் பங்களிக்கும் வகையில் மாதம் தோறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்தப்பட்டுவருக்கிறது.

பள்ளி மேலாண்மைக் குழுவின் ஆகஸ்ட்-2025 மாதத்திய கூட்டமானது அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் **29.08.2025, வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை** கீழ்காண் கூட்டப் பொருள்கள் மற்றும் பள்ளியின் முக்கியத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு நடத்தப்பட வேண்டும்.

## I. கூட்டப் பொருள்கள்:

### 1. திறன் இயக்கம் (THIRAN)

பார்வை-(2)-இல் கண்டுள்ள அரசாணையின்படி அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "திறன்" (THIRAN - Targeted Help for Improving Remediation & Academic Nurturing) இயக்கமானது ஜூலை மாதம் தொடங்கி 6 மாத காலத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கற்றல் அடைவில் பின்தங்கியுள்ள மாணவர்களை, திறன் திட்டச் செயல்பாடுகளின் வழியாக முன்னேற்றம் அடையச் செய்ய, **பள்ளி மேலாண்மைக் குழு** உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்பு தேவை என்கிற அடிப்படையில் கீழக்காண் திறன் இயக்கம் சார்ந்த செயல்பாடுகளை தலைமையாசிரியர் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

a) வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட **THIRAN மாணவர்களின் எண்ணிக்கை** விவரங்களைக் கூட்டத்தில் தலைமையாசிரியர் பகிர்ந்துக்கொள்ள வேண்டும்.

b) THIRAN வகுப்புகளை நடத்த பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்துப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

c) **ஆசிரியர் கையேடு** (Teacher Hand Book) விநியோகம் நிலை பற்றிய விவரங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும்.

d) பள்ளியில் நடத்தப்பட்ட **வாராந்திர/மாதாந்திர மதிப்பீடுகள்** (ஏதேனும் இருப்பின்) அது குறித்துப் பகிர்ந்து கொண்டு மாணவர்களின் முன்னேற்றம் குறித்து ஆலோசிக்க வேண்டும். மேலும், அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டும்.

e) THIRAN மாணவர்களின் **கற்றல் அடைவு** சார்ந்த முன்னேற்றதிற்கு அவர்கள் தொடர்ந்து வகுப்புகளுக்கு வருவதை பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர்கள் இணைந்து உறுதிசெய்ய வேண்டும்.

f) கற்றல் அடைவின் **முன்னேற்ற நிலையை ஒவ்வொரு மாதமும்** நமது பள்ளி மேலாண்மைக் குழுப் பெற்றோர் செயலியிலும் பகிரலாம்.

### 2. போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு – தொடர் விழிப்புணர்வு

பள்ளி மாணவர்களின் ஆரோக்கியமான வாழ்வைச் சீரழிக்கும் போதைப் பொருள்கள் பயன்பாடு மற்றும் அவற்றால் ஏற்படும் உடல் நலன் மற்றும் சமூகச் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலச் சமூகம் போதைப் பொருள் பயன்பாடு

இல்லாத சமூகமாக உருவாகும். இதனை உறுதிசெய்ய பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தில் தொடர்ச்சியான விழிப்புணர்வு உருவாக்குவது குறித்துப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் விவாதித்து விழிப்புணர்வுச் செயல்பாடுகளை திட்டமிடுவது அவசியம். குறிப்பாக,

a) போதைப் பொருள் இல்லா பள்ளி சூழலை உறுதிசெய்வது என பள்ளி மேலாண்மைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றுதல்.

b) பள்ளியிலிருந்து நூறு மீட்டர் தூரத்தில் புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் தடைசெய்யப்பட்ட பகுதி என உறுதி செய்தல்.

c) போதைப் பொருள் விற்போர் சார்ந்த தகவல்களை Drug Free Tamilnadu App-இல் பதிவு செய்தல்.

**3. போக்குவரத்து / பாதுகாவலர் வசதி:**

a) பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் போக்குவரத்து / பாதுகாவலர் வசதி பயன்படுத்தும் மாணவர்களின் விவரங்கள் அதற்காக மாதந்தோறும் வழங்கப்படும் தொகை மற்றும் ஓட்டுநர் / பாதுகாவலர் விவரங்கள் குறித்தும் தெரியப்படுத்த வேண்டும்.

b) போக்குவரத்து / பாதுகாவலர் வசதிக்காக பள்ளிக்கு ஜூலை மாதம் விடுவிக்கப்பட்ட தொகை, ஓட்டுநர் / பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட்ட தொகைக் குறித்து SMC கூட்டத்தில் பகிர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்

**4. இல்லம் தேடிக் கல்வி:**

a) மாணவர்கள் தமது குடியிருப்பு பகுதியில் உள்ள இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கு தொடர்ந்து சென்று கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

b) இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் பகிர்ந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்

**5. பள்ளி தூதுவர்கள் – முன்னாள் மாணவர்கள்**

சட்டப் பேரவை அறிவிப்பு எண்:11, அரசாணை நிலை எண்:112 மற்றும் பார்வை-5-இல் காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி அரசுப் பள்ளிகளில் படித்த முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்துப் பள்ளியின் வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்து

செயல்பட உயர்நிலை, மேல்நிலை மற்றும் நூற்றாண்டு பள்ளிகளில் முதல் கட்டமாகப் "**பள்ளித் தூதுவர்கள்**" நியமிக்கப்பட உள்ளனர்.

விருப்பமுள்ள முன்னாள் மாணவர்கள் மற்றும் பள்ளி தூதுவர்களாக பரிந்துரைக்கப்படும் முன்னாள் மாணவர்கள் ஆகஸ்ட் 30ஆம் தேதிக்குள் கீழ்காண் Link வழியாக விண்ணபிக்கலாம் என்ற தகவலை பள்ளி மேலாண்மை குழுக் கூட்டத்தில் ஆலோசித்து பள்ளியின் முன்னாள் மாணவர்களுக்கு தெரிவிக்க கேட்டுக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பிக்க: https://nammaschool.tnschools.gov.in/#/alumni-nomination | |
| மேலும் விவரங்களுக்கு: https://drive.google.com/file/d/1zK9mlE9TApVdXu87maD9woQ__w8YBLor/view?usp=sharing | |

**6. அனைத்து குழந்தைகளும் பள்ளியில் (ACiS)**

a) பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளை கண்டறிவாதற்கான கணக்கெடுப்பு ஆகஸ்ட் 1-ஆம் தேதி தொடங்கியுள்ளதால், இந்த கணக்கெடுப்பு காலம் முழுவதும் மாணவர்களை கண்டறிந்து பள்ளிக்கு மீண்டும் தொடர்ந்து வரவழைப்பதற்கான முழு ஒத்துழைப்பை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றுதல்.

b) பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ள (Potential dropout) குழந்தைகளாக அடையாளம் காணப்பட்ட அனைத்து குழந்தைகளும் பள்ளிக்குச் தொடர்ந்து செல்வதை பெற்றோர்களுடன் இணைந்து உறுதி செய்யும் வகையில் தீர்மானத்தை நிறைவேற்றுதல். மாதம்தோறும் இச்செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

c) தற்போது பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளை (Out of Schools), குறிப்பாக 9-12 வகுப்புகளில் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்ப்பது என தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

**7. NSNOP - பள்ளி சாளரம்:**

பள்ளிச் சாளரம் குறித்த விழிப்புணர்வை தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு (SMC) உறுப்பினர்களிடம் உருவாக்கி, பள்ளியைப் பற்றி

அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான தகவல்கள் மற்றும் புகைப்படங்களைப் பள்ளிச் சாளரத்தில் முறையாகப் பதிவேற்றம் செய்வதை ஊக்குவிப்பதே இதன் நோக்கம்.

இது "நம்ம School நம்ம ஊரு பள்ளி" திட்டம் வழியாக அப்பள்ளியின் சாதனைகள், உள்கட்டமைப்பு மற்றும் தேவைகளை அதிகளவில் வெளிப்படுத்தி, முன்னாள் மாணவர்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி மீது பொறுப்புணர்வு கொண்ட சமூகத்தினரைப் பள்ளியின் வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதில் உதவியாக உள்ளது.

பள்ளிச் சாளரம் வழியாகப் பள்ளியின் விவரங்கள், புகைப்படங்கள் மற்றும் தேவைகளை எவ்வாறு பதிவேற்றம் செய்வது என்பது பற்றிய **வழிகாட்டுதல் காணொலி** பின்வரும் Link இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**8. மணற்கேணி செயலி**

a) மணற்கேணிச் செயலியில் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறு பாடம் சார்ந்த உள்ள வீடியோக்கள் மற்றும் வினாடி வினாக்கள் உள்ளன என்ற தகவலையும்,

b) தமிழ்நாடு SCERT பாடத்திட்டம், தொழில் வழிகாட்டுதல், போட்டி தேர்வுகள், கலை மற்றும் கலாசாரம் தொடர்பான பல்வேறு சிறப்பான உள்ளடக்க வகைகளைக் கொண்டு மாணவர்கள் அனைவரும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும்,

c) இச்செயலியானது எவ்வாறு மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைகிறது என்பதையும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் தலைமையாசிரியர் எடுத்துரைத்து,

Download Now!

பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மணற்கேணி செயலியை தங்களது Smart Phone-இல் பதிவிறக்கம் செய்வது பயன்படுத்துவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

**9. மணற்கேணி செயலி தூதுவர்கள்**

a) மணற்கேணி செயலி தூதுவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட உயர்கல்வி வழிகாட்டும் மையங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு மணற்கேணி செயலி பதிவிறக்கம் செய்தல் தொடர்பாக ஆலோசித்து அனைத்து மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஏதுவாகத் பள்ளியோடு இணைந்து செயல்பாடுவார்கள்.

b) பள்ளிகளில் ஏற்கனவே உள்ள WhatsApp குழுவில் மணற்கேணி செயலித் தூதுவர்கள் இணைதல். இதன் மூலம் பெற்றோர்கள் உதவியுடன் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மணற்கேணிச் செயலியைப் பின் தொடர்கிறார்களா என்பதை சரிபார்க்கும் வகையில் மணற்கேணி தூதுவர்களை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியர்கள் பள்ளியின் WhatsApp குழுவில் இணைத்துக் கொள்ளுதல்.

## 10. உள்ளடக்கிய கல்வி (Inclusive Education)

a) **சிறப்புத் தேவைகளுடைய குழந்தைகள்/மாற்றுத்திறனாளிக் குழந்தைகள்** ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு எந்தவித தடையில்லாமல் உங்கள் பள்ளிகளில் சேர்ந்துள்ளார்களா என்பதையும், இதுவரை எத்தனை மாற்றுத்திறன் மாணவர்களை பள்ளிகளில் சேர்த்துள்ளீர்கள் என்பதையும் பள்ளி தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிரந்துகொள்ள வேண்டும்.

b) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், வட்டார அளவில், ஆகஸ்டு 2025 இறுதியில் நடைபெறவிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான **இலவச மருத்துவ மதிப்பீட்டு முகாமில் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குதல், தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (NID & UDID) வழங்குதல், போக்குவரத்துச் சலுகை வழங்குதல், உதவி உபகரணங்களுக்கானப் பதிவு, உதவித் தொகைக்கான பதிவு, மருத்துவ ஆலோசனைகள், முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சைக்கான பதிவு** வழங்குதல் போன்ற பல சேவைகள் வழங்கப்படுவதை குறித்து குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

பிறப்பு முதல் 5 வயது வரையுள்ள மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் மருத்துவ முகாமில் பங்கேற்பதை அங்கன்வாடிப் பணியாளர், கிராமப்புறச் செவிலியர் மற்றும் அங்கீகாரம் பெற்ற சமூகநல ஆர்வலர் ஆகியோருக்குத் தெரிவித்து மருத்துவ முகாமில் பங்கேற்பதை உறுதிசெய்தல் வேண்டும். அவ்வாறு உங்கள் பகுதியில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை நீங்கள் கண்டறிந்தால் அதனை ஆசிரியரிடமோ, சிறப்புப் பயிற்றுநர் மற்றும் இயன்முறை மருத்துவரிடமோ தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளை உங்கள் வட்டாரத்தில் நடக்கவிருக்கும் முகாம்களில் கலந்துகொள்ள ஊக்குவிப்பதில் பள்ளி மேலாலண்மைக் குழுவின் பங்கு முக்கியம் என்பதை எடுத்துரைக்க வேண்டும்.

c) **கலைத் திருவிழா** மாற்றுத்திறன் மாணவர்களும் சிறப்புக் கல்வி மட்டுமின்றி படைப்பாற்றல் திறன், கலைத்திறன் போன்றவற்றிலும் சிறந்து விளங்கும் நோக்கத்தோடு பள்ளிக் கல்வித் துறையால் மாற்றுத்திறன் மாணவர்களுக்குத் தனியாகக் கலைத் திருவிழா போட்டிகள் நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி தங்கள்

பள்ளிகளில் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான கலைத் திருவிழா நடைபெறுவதை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் ஊக்குவித்து உறுதிசெய்திட வேண்டும்.

**11. உயர்கல்வி வழிகாட்டி**

a) **"உயர்வுக்குப்படி முகாம்"** உட்கோட்டம் (sub-division level) அளவில் வருகின்ற 21.08.2025 முதல் 12.09.2025 தேதிவரை நடைபெறவுள்ளது. இம்முகாம் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் ஏற்படுத்துதல் வேண்டும். இம்முகாமில் 2024 - 25 ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று உயர்கல்வியில் சேர்க்கை பெறாத மாணவர்கள், தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வு எழுதாத மாணவர்கள் அனைவரையும் சார்ந்த பள்ளி ஆசிரியர்களுடன் இணைந்து முகாமில் பங்குபெறச் செய்யவேண்டும். மேலும், இம்முகாமில் பங்குபெறும் மாணவர்கள் அனைவரும் "உடனடி கல்லூரிச் சேர்க்கை" பெறுவதற்கும் ஊக்கப்படுத்த வேண்டும்.

b) **கல்லூரி களப்பயணம்:** 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி ஆர்வமூட்டல் சார்ந்து வருகின்ற 04.09.2025 முதல் அனைத்து மாவட்டங்களிலும் "கல்லூரி களப்பயணம்" நடைபெறவுள்ளது. எனவே, சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாணவர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்புதல் வாங்குதல் போன்ற செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## II. வழிகாட்டுதல்கள்

**(அ) பள்ளி மேலாண்மைக் குழுவும், துறை சார்ந்த அலுவலர்களும்:**

a) பள்ளிக் கல்வித் துறை மூலம் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை நகலினை பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவருக்கு அளிக்க அறிவுறுத்த வேண்டும்.

b) பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிட வருவதைத் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கும் சூழலில் அதன் விவரங்களைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குத் தலைமையாசிரியர் முன்னதாகத் தெரிவிக்க வேண்டும்.

c) கல்வி அலுவலர்கள் தவிர பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினரல்லாத வேறு எந்தவொரு நபரும் பார்வையாளர்களாகக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதியில்லை.

d) பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தின் **உறுப்பினர் வருகை மற்றும் தீர்மானங்களின் திட்டமிடல்** உள்ளிட்ட விவரங்களை, **கூட்ட நாளன்று இரவு 9 மணிக்குள் TNSED பெற்றோர் செயலியில் பதிவிட வேண்டும்**.

## III. காணொலிகள்

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த செயல்பாடுகளுக்கானக் காணொலிகள் (Best Practices Videos) வருகைப் பதிவு மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்ந்த செயலியின் காணொலிகளுக்கான **QR-Code மற்றும் இணைப்பு** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **SMC Support Videos:**<br>https://bit.ly/SMCSupportvideos | |

மேற்காணும் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றிப் உரிய நேரத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் சிறப்பாக நடத்தி உறுப்பினர் வருகை, தீர்மான விவரங்களை பெற்றோர் செயலியில் (TNSED PARENT APP) பதிவேற்றம் செய்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

**பெறுநர்:**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து வகைப் பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் (சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர் வாயிலாக)

**நகல்:**

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6

## இணைப்பு –I

## பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை (மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள்)

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 - 3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | ★ கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தலைமையாசிரியருடன் இணைந்து பள்ளி வளாகத்தைப் பார்வையிட வேண்டும்.<br>★ வளாகப் பார்வையிடலின் போது மாணவ மாணவியருக்கான கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றைப் பார்வையிட்டு தேவைகளை அடையாளம் காணுதல்.<br>★ தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவைகளை அடையாளம் காணுதல். | 10 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:10 - 3:15 | ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடல் | பள்ளிக் கல்வித் துறை அதிகாரப்பூர்வமாக வழங்கிய பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடுகள் குறித்த ஊக்கமூட்டும் காணொலிகளைத் திரையிடுதல். | 5 நிமிடங்கள் |
| 3:15 - 3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகை பெற்றோர் செயலியில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவரும், தலைமையாசிரியரும் இணைந்து பதிவு செய்ய வேண்டும். | 5 நிமிடங்கள் |
| 3:20 - 4:00 | வரவேற்பு<br>திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | 1) உறுப்பினர்களை வரவேற்று, கூட்டத்தின் நோக்கத்தை தலைமையாசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>2) உறுப்பினர்கள்/சிறப்பு அழைப்பபாளர் அறிமுகம் (புதிய நபர்கள் இருப்பின்)<br>3) மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருளை (Preparing Meeting Agenda) தயாரித்து குழுவில் வாசித்தல். | 40 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| | | 4) தவிர்க்கவியலாத கூட்டப் பொருள்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்து சேர்த்துக் கொள்ளுதல். | |
| 4:00 - 4:25 | கூட்டப் பொருள் (meeting agenda) மீதான விவாதம்<br>தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள்கள் (Meeting Agenda) ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களைத் பள்ளியில் பராமரிக்கப்படும் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 25 நிமிடங்கள் |
| 4:25 - 4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | தலைவர்/தலைமையாசிரியர் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |